**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 32 of 2020 |
| Prosecution Witness | : | PW4 |

**14.11.2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : யோகேஷ் | Calling | : | மருத்துவர் |
| Father Name | : சோமசுந்தரம் | | : | |
| Village | : மொராய்சிட்டி | Age | : | 37 |
| Taluk | : திருச்சி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. .வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி ரம்யா Multi Speciality மருத்துவமனையில் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவர் சுப்ரமணியன் என்பவர் தற்போது எங்கு இருக்கிறார் என்ற விவரம் தெரியவில்லை என்பதாலும் அவரின் கையெழுத்து நன்கு அறிமுகமானது என்பதாலும், இவ்வழக்கில் காயம்பட்ட விஜய் என்பவருக்கு நான் சிகிச்சை அளித்துள்ளதாலும், மருத்துவர் சுப்ரமணியன் அவர்களின் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். அவர் கடந்த 12.11.2018 ம் தேதி விஜய் என்பவர் புத்தனாம்பட்டி மெயின் ரோட்டில் மதியம் 02.00 மணிக்கு சாலை விபத்து ஏற்பட்டு சிகிச்சைக்காக அவருடைய அண்ணன் அழைத்து வந்தார். அவரை பரிசோதித்தபோது, சற்று மயக்கத்தில் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. முகத்தில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.
2. இடது கன்னத்தில் Mandible என்ற எலும்பு உடைந்து காணப்பட்டது.
3. இடது கையில் Humerus எலும்பு உடைந்து காணப்பட்டது.
4. வலது கண் எலும்பு Orbit எலும்பு உடைந்து காணப்பட்டது.

அவருக்கு சி.டி. ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மேற்கண்ட எலும்புகள் உடைந்து காணப்பட்டது உறுதி செய்யப்பட்டது. அவருக்கு இடது கை மற்றும் முகத்திற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து

சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் மருத்துவமனையிலிருந்து 21.11.2018 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். மேற்படி காயங்கள் கொடுங்காயங்கள் என்பதால் மருத்துவர் சுப்ரமணியன் அவர்கள் கொடுங்காயங்கள் என்று காயச்சான்று வழங்கியுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

காயம்பட்ட நபர் 12.11.2018ம் தேதி சிகிச்சைக்கு வந்தபோது, அன்றைய தினம் மதியம் 02.00 மணிக்கு விபத்து நடந்ததாக கூறினார். மூன்று நபர்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று நின்று கொண்டிருந்த வாகனத்தில் மோதி கீழே விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்